பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 04 2026 SATURDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி அக்கட்சியின் நிர்வாகிகளுடன் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

2. மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில், கூடுதலாக நான்காயிரத்து 460 வாக்குச்சாவடிகளை ஏற்படுத்துவதற்கு தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

3. சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

4. மஹாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

5. உலக பாரா வில்வித்தை போட்டியில் இந்தியாவின் Shyam Sundar Swamy வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து, பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, அக்கட்சி நிர்வாகிகளுடன் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

இந்த தேர்தல் பணிகளுக்கு இடையே, இசையமைப்பாளர் ரமேஷ் விநாயகம், தம்மை சந்தித்தது தொடர்பான காணொலியை திரு. நரேந்திர மோடி சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்திய இசையை உலக அளவில் பிரபலப்படுத்துவதற்கு அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, ரமேஷ் விநாயகம் தாம் மேற்கொண்டு வரும் புதிய முயற்சிகள் குறித்து பிரதமரிடம் விளக்கினார்.

(சவுண்ட் பைட் - ரமேஷ்விநாயகம்-மோடி சந்திப்பு 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும் என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மீனவர்களின் நலனை பாதுகாக்க, மத்திய அரசு தவறிவிட்டதாக அவர் குறை கூறினார்.

கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்காக திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்களையும் திரு. மு.க. ஸ்டாலின் பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில், கூடுதலாக நான்காயிரத்து 460 வாக்குச்சாவடிகளை ஏற்படுத்துவதற்கு தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஆயிரத்து 200-க்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடிகளில், இந்த கூடுதல் மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் காரணமாக, இந்த மாநிலத்தில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 85 ஆயிரத்து 379ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்காளர்களின் நலனை கருத்தில் கொண்டு 321 வாக்குச்சாவடிகளை இடமாற்றம் செய்யவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை திருத்த மசோதா தொடர்பாக வெளியிடப்படும் அச்சங்கள் களையப்படும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் நலனுக்காக செயல்படும் அமைப்புகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

சட்டவிரோதமாக செயல்படும் அமைப்புகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெளிவுபடுத்தினார்.

வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியை ஒழுங்குபடுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விவசாயிகளுக்கு நவீன வேளாண் முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

புதிய தொழில்நுட்பங்களின் பலன்கள் குறித்தும், விவசாயிகளுக்கு விஞ்ஞானிகள் எடுத்துரைத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை உறுதிசெய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதாக பரப்பப்படும் வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று பெட்ரோலியத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

10 மாநிலங்களுக்கு சமையல் எரிவாயு ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விற்பனை எண்ணிக்கை, 5 லட்சத்தை தாண்டியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக I.O.C. கூறியுள்ளது.

இதுதொடர்பாக நுகர்வோர் தெரிவிக்கும் கருத்துக்கள் அடங்கிய காணொலியை எண்ணெய் நிறுவனங்கள் அதன் சமூகவலைதளப் பக்கங்களில் வெளியிட்டுள்ளன.

(சவுண்ட் பைட் பொதுமக்கள் 26 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக, இந்திய நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் திரு. B. சாய்ராம் கூறியுள்ளார்.

சத்திஷ்கரின் Korba-வில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறினார்.

நிலக்கரி விநியோகம் சீராக நடைபெற்று வருவதாகவும் திரு. சாய்ராம் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

மஹாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

நாசிக் மாவட்டத்திற்கு உட்பட்ட Nindori பகுதியில் சென்று கொண்டிருந்த கார், கட்டுப்பாட்டை இழந்து கிணற்றுக்குள் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<<**

நாட்டின் வளர்ச்சியில் கல்வி இன்றியமையாத தாக உள்ளது என்று உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

வாரணாசியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆசிரியர்கள் தங்களது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டால், அதன் பலன் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்யும் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் எதிர்காலம் இளையோர் கையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிறந்த குடிமக்களாக இளையோரை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது என்றும் திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

**>>>>>><<<<<<**

பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று அம்மாநில நிதியமைச்சர் திரு. Harpal Singh Cheema கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், பயிர் பாதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில், இழப்பீட்டு தொகை விடுவிக்கப்படும் என்று கூறினார்.

>>>>>><<<<<<

உலக பாரா வில்வித்தை போட்டியில் இந்தியாவின் Shyam Sundar Swamy வெண்கலப்பதக்கம் வென்றார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Ankushita Boro மற்றும் விஸ்வநாத் சுரேஷ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Ankushita Boro, கஜகஸ்தானின் Laura Yessenkeldi-யை வென்றார்.

ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் விஸ்வநாத் சுரேஷ், கஜகஸ்தானின் Sanzhar Tashkenbay-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

செர்பியாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியா 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில், Nikhil Mannath-ம், 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Shriya Anand-ம் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

>>>>>><<<<<<

Bucharest ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி - நியூஸிலாந்தின் Michael Venus இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 2-6, 10-4 என்ற செட்கணக்கில் போர்ச்சுக்கல்லின் Nuno Borges - Romania-வின் Victor Vlad Cornea இணையை வென்றது.

இப்போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

மாலத்தீவில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.